# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 12

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. பின்வருவனவற்றுள் சார்பெழுத்து அல்லாதது

அ) ம் ஆ) க இ) தி ஈ) மு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. "பதியெழு அறியாப் பழங்குடி" என்று தமிழ்க்குடியைப் போற்றும் நூல்

அ) தொல்காப்பியம் ஆ) மணிமேகலை
இ) புறநானூறு ஈ) சிலப்பதிகாரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. இளவேனில் விழா எடுக்கப்பட்டது

அ) கதிரவனுக்காக ஆ) பாண்டியனுக்காக
இ) மதிக்காக ஈ) மாதவிக்காக

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. விழுப்பம் என்ற சொல்லின் பொருள்

அ) மேன்மை ஆ) நன்மை இ) தீமை ஈ) பொறுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. பின்வருவனவற்றுள் உயிர்நெடில் எழுத்துக் கூட்டம்

அ) அ, ஆ, ஈ, உ, ஏ, ஓ, இ ஆ) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ
இ) அ, இ, உ, எ, ஒ, ஔ, ஆ ஈ) அ, இ, எ, ஏ, ஈ, ஓ, எ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்று கூறும் நூல்

அ) புறநானூறு ஆ) திருக்குறள்
இ) சிலப்பதிகாரம் ஈ) தொல்காப்பியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. "வெந்ததே சிந்தை" என்ற கவிதையை எழுதிய கவிஞர்

அ) மன்னார் அமுதன் ஆ) அருள்சுப்பிரமணியம்
இ) தாமரைக்கண்ணன் ஈ) இரவி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பாடல் அடிகளிலோ சொற்களிலோ இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது

அ) எதுகை ஆ) சிலேடை

இ) மோனை ஈ) உருவகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன

அ) முப்பால் ஆ) மூவிடம் இ) முச்சுட்டு ஈ) முக்காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் பூ

அ) மல்லிகை ஆ) முல்லை இ) செவ்வந்தி ஈ) குறிஞ்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் என்பதில் கூறப்பட்டுள்ள ஐந்து

அ) ஐம்பொறிகள் ஆ) ஐந்திலக்கணம்

இ) ஐம்புலன்கள் ஈ) ஐம்பூதங்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. கூலி வேலை என்பது

அ) இரண்டாம் வேற்றுமைத் தொகை ஆ) நான்காம் வேற்றுமைத் தொகை

இ) ஐந்தாம் வேற்றுமைத் தொகை ஈ) ஏழாம் வேற்றுமைத் தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. பின்வருவனவற்றுள் அடுக்குத் தொடர்

அ) கடகட ஆ) சின்னஞ்சிறிய

இ) அல்லும்பகலும் ஈ) ஓடுஓடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. 'ஒன்பது கோள்களையும் சிறைவைத்த கொற்றவன்' எனக் குறிப்பிடப்படுபவன்

அ) இராவணன் ஆ) சோழன் இ) இராமன் ஈ) இரணியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. மொத்த வன்னிமக்களும் ஏதிலிகளாக முட்கம்பிக் கொட்டடிகளுள் அடைக்கப்பட்டது

அ) 2010 மே மாதம் ஆ) 2011 மே மாதம்

இ) 2009 மே மாதம் ஈ) 2012 மே மாதம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. இணைவின் பயன் என்ற கருத்தை விளக்கும் பழமொழி

அ) ஆடு நனைகின்றதென்று ஓநாய் அழுகிறது.

ஆ) பூவுடன் சேர்ந்த நாரும் மணக்கும்.

இ) அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

ஈ) அக்கரைக்கு இக்கரை பச்சை.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. பின்வருவனவற்றுள் பெயரெச்சம்

அ) உண்டு ஆ) உண்டான் இ) உண் ஈ) உண்ட

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. வடக்கிருந்து உயிர் நீத்த மன்னன்

அ) சேரமான் பெருஞ்சேரலாதன் ஆ) அதியமான் நெடுமானஞ்சி

இ) குலோத்துங்க சோழன் ஈ) கரிகாற் சோழன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. தொன்மங்களில் ஒன்று

அ) திருக்குறள் ஆ) மணிமேகலை

இ) திருவிளையாடற் புராணம் ஈ) சிலப்பதிகாரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. அழகாக நடனம் ஆடினாள். இச்சொல்லியத்தில் தோன்றாது இருக்கும் சொல்லிய உறுப்பு

அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள்

இ) பயனிலை ஈ) அடைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. ஓட்டைக்கையன் என்பது

அ) அடுக்குத் தொடர் ஆ) இரட்டைக்கிளவி

இ) இணைமொழி ஈ) மரபுத் தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. ஊடகவியலாளர் பற்றிக் குறிப்பிடும் கவிதைத் தலைப்பு

அ) எழுத்தாணி ஏந்தும் ஈசர்கள் ஆ) நேரம் இதுதான்

இ) வெந்ததேசிந்தை ஈ) இனியும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. “குன்றின் அருவிதாழ் மாலைச்சுனை...” எனத்தொடங்கும் பாடலைப் பாடியவர்

அ) கண்ணதாசன் ஆ) பாவேந்தர்

இ) நல்லத்துவனார் ஈ) இளங்கோவடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. கண் + புலன் என்பதைச் சேர்த்தால்

அ) கண்புலன் ஆ) கட்ப்புலன்

இ) கட்புலன் ஈ) கண்ப்புலன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. மண்ணின் மைந்தர்கள் மாவீரர்கள். இச்சொல்லியம்

அ) ஏவல் ஆ) வினா இ) கூற்று ஈ) வியப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. பின்வருவனவற்றுள் ஈரறிவு உயிரி

அ) நத்தை ஆ) மரம் இ) எறும்பு ஈ) நண்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. கல்லோயா எனச் சிங்களத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட தமிழர் நிலம்

அ) மட்டக்களப்பு ஆ) கொட்டியாரம்

இ) பட்டிப்பளை ஈ) பட்டிருப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. அல்வழித் தொகைகள்

அ) ஆறு ஆ) ஐந்து இ) நான்கு ஈ) இரண்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. பின்வருவனவற்றுள் பகாச்சொல்

அ) கவிஞர் ஆ) உழவர் இ) நிலம் ஈ) மாம்பழம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. பெரும் பொழுதுகளில் ஒன்று

அ) மாலை ஆ) யாமம் இ) கார் ஈ) காலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. தமிழினத்தின் சான்றாண்மை கொண்ட போர்முறைக்குச் சான்றாக வன்னியில் நடந்து முடிந்த அண்மைக்கால நிகழ்வு ஒன்றைத் தருக?

2. உண்மையில் ஈழத்தமிழ் ஏதிலிகள் எனப்படுவோர் யார்?

3. விண்ணுந்து பற்றிய குறிப்புகள் காணப்படும் இரண்டு இலக்கியங்களின் பெயர்களைத் தருக.

4. **குறள்:-** ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
   எய்துவர் எய்தாப் பழி
   இக்குறளின் பொருளைத் தருக.

5. பழந்தமிழருடைய இயற்கை வாழ்விலே உழைப்பொழிந்த காலம் எது?

6. உலகநாடுகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஏன் நசுக்க விரும்பின?

______________________________________________

______________________________________________

7. ஆரியரால் மறைக்கப்பட்ட தமிழர் நூல்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

### 3) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழிலக்கியம் பல்லாயிரம் ஆண்டு கால வரலாறு உடையது. மூன்று கழகங்களாக முதற்கழகம் இடைக்கழகம் கடைக்கழகமென அமைத்துத் தமிழ் மொழியை வளர்த்த எம்முன்னோர் போற்றத்தக்கவர்கள். முதல் இடைக் கழகங்கள் அமைந்திருந்த நிலப்பரப்புக் கடற்கோளினால் அழிவுற்றது. அக்கழக காலங்களில் எழுதப்பட்ட நூல்களில் மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட 'ஒல்காப் பெரும் புகழ்' எனப் போற்றப்படும் தொல்காப்பியம் ஒன்றே தப்பிப் பிழைத்து இன்றும் எங்களது இலக்கண நூலாக இருக்கிறது.

எமக்குக் கிடைத்த கடைக் கழக நூல்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என வகுக்கப்பட்டுள்ளன. இம் மூன்று பகுதிகளிலும் முப்பத்தாறு நூல்கள் உள்ளன. இந்நூல்கள் பழந்தமிழ் மக்களின் வாழ்க்கை நிலை, பண்பாடு போன்றவற்றை விளக்குகின்றன. கழக நூல்கள் மட்டுமல்ல ஐம்பெருங் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, சீவகசிந்தாமணி, வளையாபதி என்பவற்றோடு இறையன்பு நூல்களான தேவாரம், திருவாசகம், திருவருட்பா, திவ்வியபிரபந்தம் போன்ற நூல்களும் தமிழ்மொழியின் சிறந்த இலக்கியங்களாகக் காணப்படுகின்றன. தமிழ்மொழியின் தற்கால இலக்கியங்களாகப் புதினம், சிறுகதை, நாவல், மரபுக்கவிதை, புதுக்கவிதை போன்ற இலக்கியங்கள் காணப்படுகின்றன. புதுமைப் பித்தன், பாவேந்தர், கல்கி, அகிலன், அசோகமித்திரன், பாலகுமாரன் போன்ற பல்வேறு எழுத்தாளர்கள் தமிழ்மொழியில் எழுதினாலும் தனித்தமிழ் நடையைப் பின்பற்றும் எழுத்தாளர்கள் தமிழ்த்தாயின் அன்புக்குரிய குழந்தைகளாகக் கருதப்படுகின்றனர்.

1. ‘ஒல்காப் பெரும் புகழ்’ எனப் போற்றப்படும் நூல் எது?

______________________________

______________________________

2. இங்கு கூறப்பட்ட இறையன்பு நூல்கள் இரண்டின் பெயர்களைத் தருக?

______________________________

______________________________

3. கடைக்கழக நூல்கள் எவ்வாறு வகுக்கப்பட்டுள்ளன?

______________________________

______________________________

4. தமிழ்த்தாயின் குழந்தைகள் யார் எனக் கூறப்படுகிறது?

______________________________

______________________________

5. மூன்று கழகங்களின் பெயர்களையும் தருக?

______________________________

______________________________

புள்ளிகள் 10

**4) பின்வரும் கவிதைத் தலைப்பில் ஒன்றினைத் தெரிவு செய்து பத்து வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

- எங்கே நீ வாழ்ந்தாலும்
  எம் பணியோ உன் வழியில்

- அறிவியல் வளர்ச்சி விண்ணை முட்டுதே
  அழுகுரல்களும் எங்கும் கேட்குதே

- வாரி அள்ளிப் போட்டுவிட்டார் புதைகுழியில்
  வாழும்வரை தீராது துயர் விழியில்

புள்ளிகள் 10

## 5) இலக்கண/மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் வினைச்சொற்களின் திணை, பால், இடம் என்பவற்றைத் தருக.

| | திணை | பால் | இடம் |
|---|---|---|---|
| படித்தனர் | ______ | ______ | ______ |
| ஓடின | ______ | ______ | ______ |

2. வேற்றுமைத்தொகை என்றால் என்ன?

______________________________

பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக?

2ஆம் வேற்றுமைத்தொகை :- ______________________

6ஆம் வேற்றுமைதொகை :- ______________________

3. மாறுபடுபுணர்ச்சிகள் எத்தனை வகைப்படும்? அவற்றுள் ஏதாவது இரண்டிற்கு ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

______________________________

______________________________

4. பின்வரும் மரபுத்தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

பதைபதைத்து :- ______________________

______________________

எண்ணி எண்ணி :- ______________________

______________________

5. பின்வருவனவற்றுக்கு ஒவ்வொரு எடுத்துக் காட்டுத் தருக.

சினைப்பெயர் :- ______________

காலப்பெயர் :- ______________

குணப்பெயர் :- ______________

**புள்ளிகள் 15**

## 6) பந்தியை வாசித்து; மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

இந்த உலகில் மாந்தரினம் அதிகரித்துச் செல்லும் அளவுக்கு உணவு உற்பத்தி அதிகரிக்கவில்லை. உணவுத் தேவை அதிகரிக்க உணவுத் தட்டுப்பாடும் அதிகரிக்கும் நிலை தோன்றியுள்ளது. கடல் உணவுகள் உணவுத் தேவையின் ஒரு பகுதியினை நிறைவு செய்கின்றன. ஆதிகாலம் தொட்டு கடற்றொழில் இன்றியமையாத ஒரு தொழிலாக இருந்து வருகின்றது. எமது தமிழீழத்தில் கடற்றொழில் செய்வோர் தற்போது பல துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர். இயற்கை அழிவுகளான ஆழிப்பேரலை, சூறாவளி போன்றவற்றினாலும் சிறிலங்கா கடற்படையின் கொடுமைகளாலும் தமிழீழ மீனவர் உயிர் இழக்கின்றனர். அத்துடன் அவர்கள் மீன்பிடிக்கும் தமிழீழக் கடற்பகுதியும் பாதுகாப்பு வலையம் என்ற பெயரால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் செல்லும் கடல் எல்லையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் எமது தமிழீழக் கடற்றொழிலாளர்கள் இருதலைக்கொள்ளி எறும்பு போல் செயற்கை அனர்த் தங்களுக்கும் இயற்கை அனர்த்தங்களுக்கும் இடையில் சிக்கித் தவிக்கின்றனர். இத்தனை துன்பங்களுக்கும் நடுவில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு மீன்களைப் பிடித்து வந்தாலும் பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல் அம் மீன்களைச் சிறிலங்காக் கடற்படை பறிமுதல் செய்து விடுகின்றது. தமிழீழக் கடலில் தூண்டில் போட்டால் அதிகளவு மீன்கள் கிடைத்தன அன்று. அதிகளவு உடல்கள் கிடைக்கின்றன இன்று. இந்நிலை என்று மாறும். மாற வேண்டும். தமிழன் திரைகடல் ஓடித் திரவியம் தேட வேண்டும்.

**சுருக்கத்திற்கான குறிப்புகள் :**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

________________________________________

**புள்ளிகள் 05**

**7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

☆ தேவையில் எழுந்த காலத்தின் கவிதைகளும் அதில் உம்மைக் கவர்ந்த கவிதையும்

☆ 'ஈழத்தமிழரும் ஏதிலி வாழ்வும்' என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொண்டவற்றைத் தொகுத்து எழுதுக.

☆ நீர் கற்ற தமிழ்க்கல்வியும் நீர் ஆற்ற இருக்கும் தமிழ்ப்பணியும்

புள்ளிகள் 20